★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

திராவிடர் தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 7உ புதன் (20—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 8உ வியாழன் (21—6—56) [இதழ் 5

வடக்கு வளரும் வகை!

கல்கத்தா, ஜுன் 19—

மத்திய அரசாங்கத்தின் கனரகத் தொழில் மந்திரி எச். எம். ஷா, துர்க்காபூர், ரூர்கேலா, பிலாய் ஆகிய இடங்களில் மூன்று எஃகுத் தொழிற்சாலைகள் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது என்று குறிப்பிட்டார்.

இந்தப் பொருளாதார ஆண்டுக்குக் குறைந்தது 10,00,000 டன் எஃகு தேவைப்படுமாம். இது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுமாம்.

ரஷ்யாவிலிருந்து 3,00,000 டன் எஃகும், போலந்திலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

'பொதுத் தேர்தலில் காங்கிரசாரை 'கவாத்து' வாங்குவோம்'

'கையில் காசும் இல்லை - கழகத்தவர் மனதில் மாசும் இல்லை'

'அடக்குமுறைகளால் அழிக்க முடியாதது கழகம்!'

'வெள்ளையராட்சிக்கும் — காங்கிரசாட்சிக்கும் வேறுபாடு உண்டா?'

'அரசியல்வாதிகளை சிறைப்படுத்தும் முறையில் மாற்றம் இல்லையே'

பரமக்குடியில் அண்ணா முழக்கம்

"திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எனக்கும் இதர தோழர்களுக்கும், நண்பர்கள் பலர் கைத்தறி ஆடைகளையும், மலர் மாலைகளையும் பரிசுகளாக வழங்கினார்கள்; இந்த இயக்கத்தில் ஈடுபட்டு கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டதற்காக அந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன.

"கடந்த ஏழு ஆண்டுக் காலத்தில் கழகம்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் சாதாரணமானவையல்ல! அனுபவித்துள்ள அடக்குமுறைகளும் சமானியமானவை அல்ல!

"எத்தனையோ தடியடிகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம்! துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலர் பலியாகியிருக்கிறார்கள்; 6,000 பேர்வரை சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள்!

"ஆட்சிக்கு வந்தால் அரசியல்வாதிகளை அடித்துத் துன்புறுத்த மாட்டோம்; அடக்குமுறைக்கு ஆளாக்க மாட்டோம்; தடிகொண்டு தாக்கமாட்டோம்; சிறையில் பூட்டி கொடுமைப் படுத்த மாட்டோம்—என்று, யார் பேசினார்களோ அவர்கள்—அந்தக் காங்கிரஸ்காரர்கள்தான், இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள்; அவர்களின் ஆட்சியில்தான், நமது கழகத்தின் மீது கொடிய அடக்குமுறைகள் ஏவப்பட்டிருக்கின்றன.

"காங்கிரஸ்காரர்களில் சிலர், 'கழகத்தவர்பட்ட கஷ்ட நஷ்டங்கள் என்ன, வெகு சாமானியமானவை; நாங்கள் வெள்ளையர் காலத்தில் எத்தனை கஷ்டங்களை அனுபவித்தோம்? ஆண்டுக் கணக்கில் சிறையிலிருக்கவில்லையா?'—என்று கேட்கத் தோன்றலாம். காங்கிரஸ்காரர்கள் வேண்டுமானால் அதிக நாள் சிறையிலிருந்திருக்கலாம்; ஆனால், சிறை வைக்கப்பட்டமுறையிருக்கிறதே—அதில் என்ன வேறுபாடு காண்கிறார்கள்?

"'குழந்தையை இப்படியா அடிப்பது?'—என்று, பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கேட்ட ஒருவள், தன் குழந்தையை அடிக்கிறாள்; அப்போது வேறொரு பெண், 'என்னம்மா? பக்கத்து வீட்டுக்காரியை, 'கொடுமையானவள்' என்று கூறிவிட்டு, நீ இப்படிப் போட்டு குழந்தையை அடிக்கிறாயே?'—என்று கேட்டால், 'நான் என்ன, அவளைப்போல பலமாக அடிக்கவில்லையே? லேசாகத்தானே அடிக்கிறேன்'—என்று பதில் கூறுகிறாளெனக் கொள்வோம்; அதுபோலவே காங்கிரஸ்காரர்கள், 'வெள்ளையன் பலமான அடக்குமுறைகளைப் பிரயோகித்தான்; நாங்கள் அப்படி அல்ல', என்று கூறுகிறார்கள்! காங்கிரஸ்காரர்கள், அதிகநாள் சிறையிலிருந்தார்கள் என்பதைத்தவிர சிறைப்படுத்துகிற முறையில், வேறுபாடு ஏதும் காணோம்—காங்கிரஸ் ஆட்சிக்கும் வெள்ளையராட்சிக்கும்!"

—என்று, 14—6—56 அன்று இரவு 11 மணியளவில் பரமக்குடி ஆற்றங்கரையில், நகர தி. மு. க. சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

"'ஆரிய மாயை' என்றோர் புத்தகம் எழுதினேன்; அந்தப் புத்தகம், 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பிரதிகள்வரை விற்பனையாகி, பல்லாயிரவர் படித்து, ஆறு எழு ஆண்டுகளுக்குப் பிறகு, 'அந்தப் புத்தகம் எழுதியது குற்றம்' என்று கூறி என்மீது வழக்குத் தொடர்ந்தார்கள்; சிறைப்படுத்தினார்கள்; அதுபோலவே, கழகத்தவர் எழுதிய நாடகங்கள் பலவற்றிற்குத் தடைவிதித்தார்கள்; நமது பத்திரிகைகளுக்கு 'ஜாமீன்' கேட்டிருக்கிறார்கள், சர்க்கார்! இவை மட்டுமல்ல, அடக்குமுறைகள்!

"வடநாட்டு மந்திரிகள் இந்த நாட்டுக்கு வந்தால், அவர்கள் ஆட்சியை நாம் வெறுக்கிறோம்—கண்டிக்கிறோம் — எதிர்க்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக, 'வருகிற வடநாட்டு மந்திரிகளுக்கு கருப்புக் கொடி காட்டுவது' என்று முடிவு செய்தது கழகம்; அப்படிக் கருப்புக் கொடி காட்ட முற்பட்ட நேரத்தில், கருப்புக் கொடி காட்டிய தோழர்கள், தாய்மார்கள் மீதெல்லாம்கூட கடுமையான தடியடிப் பிரயோகம் நடத்தியது, இந்தக் காங்கிரஸ் சர்க்கார்!

"ஆனல், சர்க்காரின் எண்ணத்தில் மண் விழுந்தது; இது போன்று, புத்தகங்களைப் பறிமுதல் செய்தல், நாடகங்களுக்கு—கூட்டங்களுக்குத் தடை விதித்தல், தோழர்கள்மீது தடியடி—கண்ணீர்ப் புகை—துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், ஆயிரக்கணக்கானோரைச்சிறைப்படுத்துதல் போன்ற கொடிய அடக்குமுறைகளாலும் நம் கழகத்தை ஒழிக்க முடியவில்லை; கழக வளர்ச்சியைத் தடுக்க

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னைக்கு 6,000 நெசவுத் தறிகள்!

சென்னை, ஜுன் 19—

"மத்திய அரசாங்கம் மேற்கொண்டும் 14,600 நெசவுத் தறிகளுக்கு அனுமதியளிக்க முடிவு செய்துள்ளது; இவற்றுள் 5,000 முதல் 6,000 தறிகள் வரையில் சென்னை மாநிலத்தில் அமைக்க அனுமதிக்கப்படலாம்" என்று நெசவாலை வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

இந்தியாவில் 1955-ல் சுமார் ரூ. 19,03,500 மதிப்புள்ள சர்க்கரை உற்பத்தி இயந்திர சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.

வடநாட்டில் நிறுவ யோசனை!

கழிவுப் பட்டைகளைப் பயன்படுத்த இரு ஆலைகள்

புதுடில்லி, ஜுன் 18—

கழிவுப் பட்டையைப் பயன்படுத்திக்கொள்வதற்காக மேற்கு வங்கத்திலும், பீகார் அல்லது அஸ்ஸாமிலும் இரண்டு 'ஸ்பன் சில்க்' ஆலைகளை ஏற்படுத்துவது பற்றி டில்லி சர்க்கார் ஆலோசித்து வருகிறார்களாம்.

யார் உத்தரவுப்படி?

15-6-56-ல், சென்னை முதலமைச்சர் காமராசர் இங்கு வருகை தந்திருந்தபோது, நகர் முழுவதும் பறந்து கொண்டிருந்த கழகக் கொடிகளை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், போலீசாரும் இறக்கிச் சென்று விட்டனர்.

அத்துடன், கழகக் கொடிகளை இறக்கமறுத்த குன்னத்தூர் தி. மு. கழக செயலாளர் தோழர், என். டி இராமசாமி அவர்களையும் துணைச்செயலாளர் தோழர் க. அன்பரசு அவர்களையு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று சுமார் மூன்று மணி நேரம் வைத்திருந்து, பின்னர் வழக்கு ஏதும் பதிவு செய்யாது வெளியே அனுப்பிவிட்டனர்.

இறக்கி எடுத்துச் சென்ற கொடிகளை இன்னும் திருப்பித்தரவில்லை. யார் உத்தரவுப்படி போலீஸ் அதிகாரிகள் இதைச் செய்தனர்?

(ந. கி.)

முதலமைச்சரிடம் மனு கொடுக்கச் சென்றவரிடம் போலீஸ் முரட்டுத்தனம்

'நியாயந்தானா?' எனக் கேட்டவருக்கும் அதே கதி

மாவட்டக் கழக உறுப்பினர் உத்தரவிற்குக் கீழ்ப்படியும் போலீஸ் துறையினர்

17—6—56 மாலை 6 மணிக்கு சென்னிமலை குமரன் சதுக்கத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில், பழைய கோட்டைப்பட்டக்காரர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முதலமைச்சர் காமராசர் அவர்களையும் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதலமைச்சர் வந்தவுடன், தாமரைகாட்டு வலசு தோழர் சுப்பிரமணியம் என்பவர் (கீழ் பவானி விவசாயிகள் சங்க ஊழியர்), ஒரு விண்ணப்பத்தைக் காமராசர் அவர்களிடம் கொடுக்க முயற்சித்தார்; ஆனால், போலீஸ் அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி, கூட்டத்திற்கு அப்பால் இழுத்துவந்து அடித்தார்கள்; இதை அருகிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த நமது தோழர் இராவணன், அதிகாரிகளிடம்சென்று, 'விண்ணப்பம் கொடுக்க முயற்சித்ததைத் தடுத்ததுமன்றி, ஏன் அத் தோழரை அடிக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதுபோது, அருகில் இருந்த கோவைமாவட்ட நாட்டாண்மை கழக உறுப்பினர் வி எஸ். எம். நஞ்சப்பா அவர்கள், 'இருவரையும் பிடித்து உள்ளே தள்ளுங்கள்,' என்று சொன்னார்.

அதன் பிறகு, அதிகாரிகள், இருவரையும் கைதுசெய்து, கூட்டத்தில்குழப்பம் விளைவித்ததாக பெருந்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.

வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 26—6—56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந. கி.)

அடக்குமுறைக்கு ஆளாகி உறுப்பிழந்த தோழர்கட்கு தலைமைக் கழக நிதி உதவி

பூவாளூர் சிறப்புக் கூட்டத்தில் என். வி. நடராசன் வழங்கினார்

பூவாளூர், ஜுன் 20—

திராவிடரின் விடுதலை வரலாற்றில், 'மும்முனைப் போர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றுவிட்ட—தி. மு. கழகம் கடந்த 1953 ஜுலைத் திங்களில் நடத்திய போராட்டத்தின் ஒரு பகுதியான 'டால்மியாபுரம்' பெயர் மாற்ற அறப் போராட்டத்தின்போது, காங்கிரஸ் சர்க்காரின் துப்பாக்கிப் பிரயோக அடக்குமுறைக்குத் தங்கள் அங்கங்களைக் காணிக்கை தந்த இரு தோழர்களுக்கு, அவர்களின் அவதியைத் துடைப்பதற்காகத் தி. மு. கழகத் தலைமை நிலையம், நிதி வழங்கி உதவியிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—6—'56 புதன்

சனநாயகத்துக்குக் கழுமரம்!

வடபகுதி காங்கிரஸ் ஊழியர் மாநாடு உத்திர பிரதேசத்தில் நடைபெற்று இருக்கிறது. அந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நேருவும கலந்து கொண்டு, காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்குச் சரிவையும், காங்கிரஸ் கட்சியினரிடை வளர்ந்துவரும் ஒழுக்கக்கேட்டையும், அரசாங்க ஊழியர்களைக் குறித்து அவர்கள் கொண்டுள்ள ஆணவப்போக்கையும் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

அவைகளைக் குறிப்பிட்டதுடன் அவர் நின்றுவிடவில்லை. பொதுத் தேர்தலிலும தீவிரமான மாற்றத்தைச் செய்தாக வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

தாம் நுழைக்கக் கருதும் அத்தீவிர மாற்றம பற்றி திட்டவட்டமான ஒரு ஏற்பாட்டைத் தாம் கொண்டிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

அதாவது, அடிப்படையில் நடைபெறும் தேர்தல்களை நேரடியாகவும், மற்ற தேர்தல்கள் அனைத்தையும் மறைமுகமாகவும் நடத்த வேண்டும என்பதே அவருடைய திட்டவட்டமான ஏற்பாடாகும்.

பெரும் பணச் செலவிற்கும், விரும்பத்தகாத பல கொடுமைகள் அரசியல் வாழ்வில் இடம் பெறுவதற்குப் பிறப்பிடமாகவும் இன்றைய தேர்தல் முறை இருந்துவருகிறது. இவைதக்களைந்தெறிய மறைமுகத் தேர்தல் முறையே சிறந்த பரிகாரமாகும என்பது இந்தியப் பிரதமர் நேருவின் நம்பிக்கை.

மிகுதியான பணச் செலவையும், அரசியல் ஒழுங்கீனத்தையும காரணங்களாகக் காட்டி, நேரடியான தேர்தலைக் குழியில் தள்ளி மூடி, மறைமுகத் தேர்தலுக்குத் திட்டம் தருபவர் பண்டித நேருதானு என்று நாம ஐயுற வேண்டியதாக இருக்கிறது. சனநாயக ஆட்சி முறையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பவர் எனப் பிறரால் பாராட்டப்பட்டுவரும் ஒருவரின் நிலையே இதுவானுல், இந்து மத கலாசாரத்திலும் ஆரிய தர்மத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கும ஆச்சாரியார் போன்றவர்கள், இதனிலும் மோசமான முறைகளைக் கூறிவருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

இன்றுள்ள தேர்தல் அமைப்பில் அதிகமான பணச் செலவிற்கு இடமிருக்கிறது என்பதை ஏற்க மறுப்பவர் எவரும் கிடையாது. தேர்தலில் கலந்து கொள்ளுகிறவர்கள் ஒழுங்கீனமான முறைகளை எல்லாம மேற்கொண்டு வெற்றி பெற முயலுகிறார்கள் என்பதும் நூற்றுக்கு நூறு உண்மையாகும.

பணச் செலவை மட்டுப்படுத்துவதும், தேர்தலில் பங்கு கொள்ளுகிறவர்கள் ஒழுங்கீனமான முறைகளை மேற்கொள்ள விடாமல்தடுப்பதும வரவேற்கத் தகுந்ததாகும். இவ்விரண்டையும் நற்பயன் ஏற்படும் வகையில் செயலாற்ற தமது அரசாங்கத்தால் இயலவில்லையென்றுல், தமது அரசாங்கத்தின் இயலாமையைத் தாமே ஒப்புக்கொண்டதாக முடியும். அவ்வாறு ஒப்புக்கொள்வது மதிப்புக் குறைவு என்பதற்காக, நேரடி தேர்தல் முறைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, மறைமுகத் தேர்தலுக்கு மாலை சூட்ட முன் வருவது எந்த வகையிலும் நியாயமாகாது. அது சனநாயகத் தத்துவத்தையே கழுமரத்தில் ஏற்றுவதாக முடிந்துவிடும்.

மறைமுகத் தேர்தல் ஏற்பாடு என்றுல் என்னவென்று பார்ப்போம்.

வயதுவந்தவர்களைக்கொண்டு சிற்றூர் ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதே முறையில்தான் மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், அந்தந்த மாகாண சட்டசபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த உறுப்பினர்கள் மக்கள் சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதுதான் மறைமுகத் தேர்தல்.

இம்மறைமுகத் தேர்தலை மேற்கொள்ளுவதினுல், இந்தியப் பிரதமர் நேரு நினைக்கின்றபடி பணச் செலவு குறைவதற்கும, தேர்தலில் கலந்து கொள்ளுகிறவர் உற்பத்திச் செய்யும் ஒழுக்கக் கேடுகள் மறைவதற்கும வழி பிறந்துவிடும் எனக் கூறிவிட முடியாது. அது விவாதத்திற்குரியதேயாகும்.

தேர்தலுக்காக அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கும் செலவு, மறைமுகத் தேர்தலின் மூலம கணிசமாகக் குறைவதற்கு இடமேற்படலாம; ஆனுல், ஒழுங்கீனம் குறைந்துவிடும என எதிர்பார்ப்பது வெறும் ஏமாற்றத்திலேயே முடிவுறும்.

மறைமுகத் தேர்தலினுல் அரசியல் ஒழுங்கீனத்தை இல்லாது செய்ய முடியுமா அல்லது குறைக்க முடியுமா என்றுல், இல்லை என்றுதான் உறுதியாகக் கூற வேண்டும. ஆனுல் தேர்தலில் பங்கு கொள்ளுகிற அபேட்சகர்களுக்குச் செலவும, இலட்சக்கணக்கான வாக்காளர்களைச் சந்திக்க வேண்டியதற்குத் தேவைப்படும அலைச்சலும் தாராளமாகக் குறைந்துவிடும்.

மாகாண சட்டசபைகளின் உறுப்பினர்கள்தான், இப்பொழுது டெல்லி இராஜ்ய சபை உறுப்பினர்களில் பெரும பகுதியினரைத் தேர்ந்தெடுத்து வருகின்றனர். இம்மறைமுகத் தேர்தலில் கையாளப்பட்டு வரும் ஒழுங்கீனச் செயல்கள், நேர்முகமானத் தேர்தலில் கூடக் காண முடிவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது என்ற உண்மையை அனைவரும் அறிந்தே இருக்கின்றனர்.

இந்த ஒன்றை வைத்துக் கொண்டே, விரிவான முறையில் மேற்கொள்ளப்படும மறைமுகத் தேர்தல் எத்தகைய விளைவுகளுக்கு இருப்பிடமாக இருக்கும என்பதை உருவகப்படுத்திக்கொள்ளலாம். எனவே மறைமுகத்தேர்தலினுல் கிடைக்கக்கூடிய இலாபத்தைக் காட்டிலும நஷ்டம்தான் அதிகம என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நேர்முகத் தேர்தலை ஒழித்து மறைமுகத் தேர்தலுக்குச் செல்ல இந்தியப் பிரதமர் கூறும் வெளிப்படையான இரண்டு காரணங்களைவிட, அவர் குறிப்பிடாதுவிட்ட வேறு சில காரணங்களும இருக்கின்றன. அதுபற்றி பிறகு விரிவாக எழுதுவோம.

மறைமுகத் தேர்தல் முறை சனநாயகத்திற்கு முரண்பட்டதாகும; ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிரந்தரமாக நிலைபெறச் செய்யக்கூடியதாகும.

எனவே, நேருவின் மறைமுகத் தேர்தல் கருத்தை, சனநாயகத்திற்குச் செப்பனிடப்படும் கழுமரம் என்றுதான் கொள்ளவேண்டும்!

மலேயா தமிழர்கள் உரிமைக் குரல்!

கூலி விகிதத்தில் வேறுபாடுகளேன்?

தமிழ்க் கல்லூரி அமைக்க கோரிக்கை

இந்தியத் தொழிலாளர்களுக்கு மதுவகைகள் வழங்கக் கூடாது

கோலாலம்பூர், ஜூன் 18—

'மலேயாவில் இனப்போராட்டம் நடைபெறுமானுல், அப்போது அங்கு வாழ்கின்ற தமிழர்களுக்குப் பிரத்தியேகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்"

என்று, மலேயா தமிழ்ச் சங்கம் அரசியல் நிர்ணய கமிஷனுக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையில் வேண்டிக் கொண்டுள்ளது.

தமிழ்க் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டுமென்றும், தமிழர்களுக்கென ஒருதொழிற் கல்விக் கூடம் அமைக்க வேண்டுமென்றும், இந்தியத் தொழிலாளர்களுக்கு கள், சாராயம் விற்கப்படுவதைத் தடை செய்ய வேண்டுமென்றும், அவ்வறிக்கை கேட்டுக் கொள்கிறது.

இப்போது சீனத் தொழிலாளர்கள், தமிழ்த் தொழிலாளர்களைக் காட்டிலும் அதிகக்கூலி பெறுகின்றனர் என்றும், இந்நிலை மாறி எல்லா இனத்தவருக்கும் ஒரே மாதிரியான கூலி இருக்கும்படி செய்ய வேண்டுமென்றும், திருமணமாகாதவர்களுக்கும்— திருமணமானவர்களுக்கும நிலையான சம்பள விகிதம நிர்ணயிக்கப்படவேண்டுமென்றும், எல்லாப் பெரிய தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்க வேண்டுமென்றும் அச்சங்கம் கேட்டுக் கொண்டது.

ஆச்சாரியார் பேசிய கூட்டத்தின் இலட்சணம்!

'நவ இந்தியா' நிருபர் கணிப்பு

சென்னை, ஜூன் 15—

"சி. இராசகோபாலாச்சாரியார் எடுத்துக்கொண்ட பொருள் அரசியல் நிறைந்த சுவாரஸ்யமான செய்தியாக இருக்குமென்று கருதப்பட்டபோதிலும், கூட்டத்திற்கு வந்திருந்தோர் மிகக் குறைவேயாகும். கல்லூரி மண்டபமோ மிகச் சிறியது; இம்மண்டபம் நிறைந்திருக்கவில்லை; ஆச்சாரியார் ஆங்கிலத்தில் பேசினுர்"

உலக விவகார இந்தியக் கவுன்சில் ஆதரவில் சென்னை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் 'வெறுப்பு மூட்டுதல்' என்னும் பொருள்பற்றி ஆச்சாரியார் பேசினுர். ஒற்றுமையும் கலாச்சாரமும் இல்லையேல், பொருளாதார முன்னேற்றத்தில் பயனேதும் இல்லை என்றும், 'வெறுப்பு மூட்டுதல்' ஒற்றுமைக்கும், கலாச்சாரத்திற்கும் கொடிய பகை என்றும் அவா குறிப்பிட்டார்..

ஆச்சாரியார் ஒற்றுமை, கலாச்சாரம் குறித்து நீண்ட நேரம் பேசிய பின்னா, தமிழ் நாட்டின் அரசியல் நிலைபற்றி குறிப்பிட்டார். இந்தியாவை புத்தர் நாடு என்றும், அவர் அன்பு, கருணை உபதேசம் செய்தாரென்றும் அதே நாட்டில் சிலர் வெறுப்பும், பலாத்கார உபதேசமும் செய்து வருகின்றனர் என்றும ஆச்சாரியா அளந்து கட்டியிருக்கிறுர்!

பணிபுரிவோர் 'பரிசு' பெற வாய்ப்பு

சென்னை, ஜூன் 18—

சென்னை அரசினா போக்குவரத்து இலாகாவிலுள்ள டிரைவர்கள், கண்டக்டர்கள், தொழில் நுணுக்க நபர்கள் ஆகியோர் பரிசுகளைப்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுமாம்.

குறித்த காலப்படி வண்டியை ஓட்டுதல், சரிவர கடமையை செய்தல், பிரயாணிகளிடம் மதிப்புடன் நடந்துகொள்ளுதல் போன்ற ஒழுங்குமுறைகள் பரிசுகளைப் பெற வழி செய்வதுடன், இலாகாவினரின் பாராட்டையும் பெறுவதற்கு வழிகோலுமாம்.

இஸ்ரேல் பிரதமர் விசித்திரக்கோலம்

அயல்நாட்டு மந்திரியை நீக்கியதற்குக் காரணம்?

ஜெருசலம், ஜூன் 17—

இஸ்ரேல் பிரதமர் பெனகுரியன் தன்னுடன் இருபது ஆண்டுகளாகப் பணிபுரிந்துவந்த அயல்நாட்டமைச்சர் மோஷே ஷாரட்டை, விருவிருப்பான கொள்கைகு மாறாக சமரசக் கொள்கையைப் பின் பற்றியதாகக் குற்றம் சாட்டி, ஷாரட்டை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அப்பதவிககு ஒரு பெண்ணை நியமித்துள்ளாராம்.

58 வயதுடைய திருமதி மேயர்சன் ரஷ்யாவில் பிறந்து அமெரிக்காவில் படித்தவராம். 35 ஆண்டுகட்கு முன்னர் பாலஸ்தீனத்தில் குடியேறினுர் என்றும், அவர் யூத சோஷலிஸ்டு கட்சி உறுப்பினர் என்றும் அறிவிக்கப்படுகிறது

ஐ. நா. பாதுகாப்பு சபையில் மத்தியக் கிழக்கு சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அரபுகளின் மிரட்டலுக்குப் பணிந்துகொடுப்பதாக இருக்கிறதென்றும், இதற்கு ஷாரட் காரணமென்றும், பென்குரியன் கருதுகிருராம்!

தென்னுட்டில் ஏற்பட வாய்ப்பு உண்டா?

மற்ருெரு அலுமினியம் தொழிற்சாலை நிறுவப்படுமாம்

இந்தியாவில் 10,000 டன் உற்பத்திச் சக்தி கொண்டதாக இருக்கும் மற்ருெரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படக்கூடுமாம்! இது முழுக்க முழுக்க அரசினரால் நடத்தப்படுமாம.

ஒரிசாவிலுள்ள ஹிராகுட்டில் தனிப்பட்ட முறையில ஒரு அலுமினியத் தொழிற்சாலை நிறுவ அனுமதிக்க அரசியலார் எற்கனவே முடிவு செய்துள்ளது நினைவிலிருக்கலாம்.

அரசியலாரின்தொழிற்சாலையை எங்கு நிறுவுவது என்பதுபற்றி இன்னும் முடிவாகவில்லை என்றும, ஆனல போதிய மின்சாரம் கிடைக்குமிடத்தில் அது அமைக்கப்படலாமென்றும, தேசியக் கைத்தொழில் முன்னேற்ற 'கார்ப்பரேஷன' அத்திட்டத்தைப் பரிசீலித்து வருவதாகவும் மத்திய அமைச்சா டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்திருக்கிறுர்.

மேலும் சில அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசனை கூற அமெரிக்க நிபுணர்கள் விரைவில் இந்தியாவுக்கு வரவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறுர்.

2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள்!

ஆண்டவனிடமும் - மக்களிடமும் குவிந்து கிடக்கிறதாம்!

சென்னை—

"தேவைக்கு அதிகமான தங்க அணிகலன் மக்களிடமுள்ளன; அவைகளை விற்பதின மூலம் சுமார் ரூ 1000 கோடி மிச்சப்படும்; கோயில் சொத்துக்களிலிருந்து ரூ. 1000 கோடி கிடைக்கும்,"

என்று, 'ஆந்திர பிரபா' ஆசிரியா வி. ஆர். நாரனா கூறியுள்ளார்.

மக்கள் எண்ணிக்கை அடிப்படையில்!

அனுமதி வழங்குவதில் இனி கட்டுப்பாடு கிடையாதாம

சென்னை, ஜூன் 17—

எந்த இடத்திலும் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் நிலையான 'தியேட்டர்' அல்லது 'டூரிங்' சினிமாக்களுக்கு அனுமதி வழங்குவதில் எந்தவிதக்கட்டுப்பாடும் இருத்தலாகாது என சென்னை அரசியலார் உத்தரவு பிறப்பித்துள்ளனர் ஆனுல் 50,000 அல்லது அதற்கு மேல் மக்கள் எண்ணிக்கை உள்ள இடங்களில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலையான சினிமா 'தியேட்டர்'களிருந்தால் 'டூரிங்' சினிமாக்கள் அனுமதிக்கப்படமாட்டாதாம்.

கனரக இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனம்

சாத்தியக் கூறுகள்பற்றி இந்தியப் பேரரசு பரிசீலிக்கிறதாம்

புதுடில்லி, ஜூன் 18—

உற்பத்தித் தொழில்களின் தேவைகளை நிறைவேற்ற கனரக இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்கூடங்கள் அமைப்பதின் சாத்தியக்கூறுகள் பற்றி இந்தியப் பேரரசினர் பரிசீலித்து வருகின்றனராம்.

இரண்டு அல்லது மூன்று திங்களில், இதற்கெனப் பெரியதோர் நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் கூறியுள்ளார்.

ரூ. 5 கோடி செலவில்!

11 - தொழில் 'எஸ்டேட்'டுகள்

புதுடில்லி, ஜூன் 18—

ரூ. 5 கோடி செலவில 11 - தொழில் 'எஸ்டேட்'டுகள் ஏற்படுத்துவது பற்றிய வேலை முன்னமே துவங்கிவிட்டதென்று இந்திய அரசின் தொழில், வர்த்தக இலாகாஅமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அறிவித்துள்ளார்.

கழகச் செய்திகள்

புங்கம்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா

11—6—56-ல், புங்கம்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா தோழர் பி வ. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். பிச்சைமுத்து கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர்கள் இருதயராஜ், எழிலரசு, கே. ஆர் பி. மணிமொழியன் ஆகியோர் திராவிட நாடு பிரிவினை பற்றி விளக்கிப் பேசினர்.

12-6-56-ல், தோழர் பொன்னுசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இருதயராஜ், எழிலரசு, கே ஆர். பி. மணிமொழியன் ஆகியோர் பேசினர்.

கடையம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

13—6—56-ல், கடையம் முப்பிடாரி அம்மன்கோயில் முன்பு தோழர் ஆர். பிச்சைமுத்து தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இருதயம், எழிலரசு, கே. ஆர். பி. மணியன் ஆகியோர் இன்றைய அரசியல் நிலைபற்றியும், விவசாயிகளின் நிலை பற்றியும் விளக்கிப் பேசினர்.

ஆலத்தம்பாடியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

30—5—56-ல், ஆலத்தம்பாடி கடைவீதியில், பழயங்குடி தி. மு கழகச் சார்பில், ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ஏ.டி.கே. பாலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சந்தானம், சண்முகம் ஆகியோர் சிறிது நேரம் பேசிய பின், இறுதியாக, தோழர் ஈ. வெ கி சம்பத் அவர்கள் வரப்போகும் பொதுத் தேர்தல் குறித்து அரியதோர் விளக்கம் தந்தார்.

சென்னை— 16-வது வட்ட தி. மு. கழகம்

10—6—56 காலை 8 மணியளவில், மேற்படி வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் தோழர் கோ. கணபதி தலைமையில் கூடி பல பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப் பட்டன.

கல்லுக்குழி தி. மு. கழகம்

3—6—56 மாலை 6-மணியளவில், கழகப் பணிமனையில், கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. துணைச்செயலாளர் தோழர் ஜ எம். சரீப் வேலை நிமித்தம் ரெய்ச்சூர் சென்று விட்டதால், துணைச்செயலாளராகத் தோழர் கோ. மாணிக்கம் தேர்ந்தெடுக்கப் பட்டு, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்...து.

திருவனந்தபுரம் தி. மு. க.

7—6—56-ல் திருவனந்தபுரம் தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் செயலாளர் தலைமையில் நடைபெற்ற போது, கொள்கைப் பிரச்சாரத்திற்காக மலையாள மொழியில் நாடகங்கள் நடத்த நாடகக்குழு ஒன்று அமைக்கப்பட்டும், கேரளத்தில் இயங்கிவரும் தி. மு. கழகக் கிளைகளை ஒன்று சேர்த்து ஒரு கேரளக் குழு அமைத்து இயக்கப் பணிபுரிய ஆவன செய்யத் தீர்மானித்தும், இதற்குக் கேரளப் பகுதியில் உள்ள எல்லாக் கிளைக் கழகங்களும் ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டும், ஆலோசனை அனுப்புவோர், 'செயலாளர், தி. மு. க., ஆண்டான் லாட்ஜ், தம்பானூர், திருவனந்தபுரம்' என்ற முகவரிக்கு எழுதும்படி கேட்டுக் கொண்டும், திருவனந்தபுரத்தில் 'வள்ளகடவு' என்ற பகுதியில் ஒரு கிளைக் கழகம் துவக்க தீர்மானித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

மதுரை நகர தி.மு. கழகப் பொதுக்கூட்டம்

3—6—56 மாலை 6-30 மணியளவில் மதுரை நகர தி. மு கழகச் சார்பில், (திலகர் சதுக்கம்) சந்தைப் பேட்டையில் தோழர் எஸ். முத்து தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறியதும் அண்ணா அவர்கள் திருச்சி தி. மு. க. மாநில மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பேசினர்.

நாகலாபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

2—6—56 இரவு 7-30 மணிக்கு நாகலாபுரம் தி. மு கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் சந்தைப் பேட்டையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் அ. பொன்னம்பலனார் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

செண்பகச்சேரியில் தி. மு, கழக பொதுக்கூட்டம்

14-6-56 மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. எஸ். சௌந்திராசன் பேசிய பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து தி மு. கழகத்தின் குறிக்கோள்கள் குறித்தும், கழகம் தேர்தலில் ஏன் ஈடுபடுகிறது என்பது பற்றியும் விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

கீழையூர் தி. மு. கழகம்

12—6—56 மாலை 4 மணியளவில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளராகத் தோழர் தென்றல் மணி; துணைச் செயலாளராகத் தோழர் ச. வ சௌந்தரராசன்; மாவட்டப் பிரதிநிதியாகத் தோழர் அ முகமதுமீரான்; பொருளாளராகத் தோழர் அரங்கநாதன் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும், விரைவில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மு கருணாநிதி ஆகியோரைக் கொண்டு ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

பொதுக்கூட்டம்

12—6—56 இரவு 7 மணியளவில் கீழையூர் ஆற்றங்கரை இடைச்சிகுன்றின் அருகில் தோழர் தென்றல் மணி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பேசினர்.

மேலப்புதூர் தி. மு. கழகப் படிப்பகம்

3—6—56 காலை 10 மணியளவில், திருச்சி—மேலப்புதூர் தி. மு. கழகப் படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் கோவி. மணிமாறன் தலைமையில் நடைபெற்றபோது, மாநில மாநாட்டை யொட்டி தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்கப் பட்ட வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டது. பின்னர் படிப்பகத்தின் செயலாளராகத் தோழர் என். எஸ். நாகசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எட்டயபுரம் தி. மு. கழகம்

11—6—56 இரவு 9-மணிக்கு உமர் புலவர் கோவில் தெருவில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் மு. பேச்சியப்பன் தலைமையில் நடைபெற்றது தோழர் தேவராசன் கழகப் பண் பாடினர். தோழர்கள் மே. க முத்து, என். தேவன், எஸ். கலிங்கன், டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோர் மாநில மாநாட்டுத் தீர்மானம்பற்றியும், தற்கால அரசியல் நிலைபற்றியும் பேசினர் தோழர் ஆ. த. அர்ச்சுனன் நன்றி கவின்றார்.

நல்லூர் தி. மு. க. ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

18—6—56 மாலை 6 மணிக்கு நல்லூர் மந்தைக் கரையில், தி மு கழக முதலாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் எஸ் பி. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து கழகக் கொடியேற்றுவித்தார்; தோழர் எஸ். சண்முகம் கழகப் பண் பாடினர்.

தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், என் கிட்டப்பா ஆகியோர் பேசிய பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து தி. மு. கழகத்தின் கொள்கைகள் குறித்தும், சமுதாய சீர்திருத்தம் பற்றியும் விரிவுரையாற்றினர்.

பூலாமேடு தி. மு. கழகம்

1—6—56-ல் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற போது, துணைச்செயலாளர் நாராயணசாமி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டதுடன, தோழர் சி. கண்ணுதுரையை துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், கழகத்தின் சார்பில் வாங்கப்பட்ட 'பேபி லைட்'டை பொது நலனுக்குப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தொடையூர் தி. மு. கழகம்

8—6—56ல், தொடையூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம், அழகிரி திடலில், தோழர் டி.பி. சாரதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தராசன், மதிவாணன் ஆகியோர் பேசினர். பின்னர், அழகிரி அவர்களின் துணைவி எத்திராசு அம்மையார், கோலார் தங்கவயல் செயலாளர் சின்னராசன் ஆகியோர்மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், மாநில மாநாட்டு முடிவுகளைச் சுற்றுப்புற ஊர்களில் விளக்கிச் சொலவதென்றும், கழகத்திற்குச் சொந்தமாகப் பணி மனை ஒன்று விரைவில் கட்டி முடிப்பதென்றும் முடிவு செய்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாயூரம் நகர தி.மு. கழகம்

10—6—56 காலை 10-30 மணியளவில், மாயூரம் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் வேலாயுதம் மன்றத்தில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் வை. மாணிக்கம், ஆர். இராமானுசம், எஸ் என். குருமூர்த்தி, கே. இராசகோபால், எஸ். வேணுகோபால், மா. கி இராமசாமி, ஆ. செயராமன, டாக்டர் முத்து, ஜெசிகாமணி ஆகியோரை செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தும, மாநில மாநாட்டுத் தீர்மானங்களை முழுமனதோடு வரவேற்றும், தோழர் வி. சவுரையன் அவர்களின் துணைவியார் தோழியர் பார்வதி, தோழர் ரோக்காதன ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம தெரிவித்தும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

29—6—56-ல் நகர, தி. மு. கழகத்தின் சார்பில, தோழர்கள் ஏ பி. சிற்றரசு, ப உ. சண்முகம் ஆகியோரைக்கொண்டு பொதுக் கூட்டம் நடததுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அன்று மாலை 5-30க்கு நடைபெற்ற மாயூரம் வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாநில மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்றும், மாநில மாநாட்டின் 29-வது தீர்மானத்திற்கிணங்க (கழகப் பிரச்சாரத்திற்காக) மாயூரம் பகுதியிலுள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ரூ. 2 வீதம் நன்கொடையளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முகவரி மாற்றம்

சென்னை 12-வது வட்ட தி. மு. கழக அலுவலகம், 39 நாராயண சாரங்தோட்டத் தெருவிலிருந்து, எண் 1/1, இப்ராம்ஜி சாகிப் தெருவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கை தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

நிறைவேற்றிய தீர்மானங்கள்

10—6—56-ல் கொழும்பு செம்பட்டா தெரு, 140-ம் இலக்க கழகப் பணிமனையில் இ தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் மூ. வே. பெ. சாமி தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்தும், தமிழ் மொழிக்கு உரிமை கோரியும், 5—6—56-ல் அமைதியான முறையில் அறப்போர் புரிந்த இ. தி. மு. கவினரும், இலங்கை தமிழரசுக் கட்சியினருமான அறப்போர் தொண்டர்களை சிங்கள மொழி வெறியர்கள் தாக்கி, படுகாயங்களுக்குள்ளாக்கியதை இ. தி. மு. க வன்மையாகக் கண்டிப்பதுடன், கண்ணியம் தவறாத அறப்போர் வீரர்களுக்கு இ தி. மு. க. தனது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

5—6—56ல், சிங்கள மொழி வெறியர்கள் அறப்போர் தொண்டர்கள்மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, தமிழர்களுடைய கடைகளை உடைத்துப் பொருள்களை பகற்கொள்ளையிட்ட கயமைத்தனத்தையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி அல்லலுறும் தமிழ் வணிகருக்கு தகுந்த நஷ்—ஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறது.

தனிச் சிங்கள மசோதாவிற்கு இ. தி. மு. க. தனது- எதிர்ப்பை தெரிவித்துக் கொள்வதுடன், இம் மசோதாவிற்கு தமிழ் மக்கள் தங்களுடைய ஒருமனதான எதிர்ப்பை 5—6—56ம் நாள் அறப்போர் மூலம் உணர்த்தியும் செவிசாய்க்காது ஒருதலைப் பட்சமாக மசோதாவை நிறைவேற்றிக் கொள்ள எத்தனிக்கும் அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

* * *

அறப்போர் வீரர்களுக்குப் பாராட்டுக் கூட்டம்

அறப்போரில் கலந்துகொண்டதின் மூலம், தாக்குதலுக்குள்ளான தி மு. கழகம் அறப்போர்ப்படையினரைப் பாராட்டு முகமாக, 10-6-56-ல் இ தி. மு. கழக தலைமைக் கழகத்தின் சார்பில், கழகப் பணிமனையில், தோழர் வீரா-மன்னர் மன்னன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. அதிமணி, சு. கா சுந்தரராசன், ஜலால் காயம்பூ, ஆகியோர் தொல்லைகளை ஏற்ற தொண்டர்களைப் பாராட்டி பேசினர். அறப்போர் படைத் தளபதி திரு. மூ வே. பெ. சாமி பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஒரே பாய்ச்சலில் 2,600 மைல்கள்!

புதியதோர் சாதனையை உருவாக்க முயற்சி

லண்டன், ஜூன் 18—

115 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணிக்கு 425 மைல்கள் வேகத்தில் 2,600 மைல்களை ஒரு பாய்ச்சலில் கடக்கக் கூடிய 'வைகர்ஸ் வான்கார்ட்' விமானம் தயாரிப்பதில் வைகர்ஸ் தொழிற்சாலை கவனம் செலுத்திவருகிறது.

மேல்தளத்தில் பிரயாணிகளும், அடித்தளத்தில் சரக்குகளும் இருக்கும்படி இரு தளமுள்ள இந்த விமானம், நான்கு ரோல்ஸ் ராய்ஸ் டர்போ - புரபல்லர் எஞ்சின்கள் உள்ளது. அடுத்த ஆண்டில், இது சேவைக்கு வரும்.

உணவைப் பாதுகாக்க அணுக்கதிர் இயக்கம்

அணுக்கதிர் இயக்கத்தால் உணவுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறை பல இடங்களில் கையாளப்படும் வெற்றிகரமாக உணவுத் தொழில் செலுத்திக் கொண்டிருக்கிறதாம்!

அணுக்கதிர் இயக்கத்துக்கு உட்படும் உணவின் சுவையையும், மணத்தையும் எவ்வாறு பாதுகாப்பது என்பது இன்னும் பெரிய பிரச்சினையாகத்தான் இருக்கிறதாம்; எனினும், உணவுச்சோதனைகள் செய்தபோது, அணுக்கதிரியக்கத்துக்கு உட்பட்ட உணவில் ஒருபோதும் போதை ஏற்படவில்லையாம்.

"பச்சை மீனையும் பச்சை இறைச்சியையும் பாதுகாப்பதற்கு கிருமி கொல்லி மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்தலாம் என்பதற்கு நல்ல அறிகுறிகள் தோன்றுகின்றன" என்று ஹெர்பர்ட் கிளீவ்ஸ் என்பார் கூறியுள்ளார்

பாலங்கள் அமைக்க மானிய உதவி

சென்னையில், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்னேரி-பழவேற்காடு சாலையில் 14 பாலங்களையும் 6 மதகு பாலங்களையும் கட்டுவதற்காக ரூ. 1,78,700 மானிய உதவியாக இந்தியப் பேரரசினர் வழங்கியுள்ளனர் எனத் தெரிகிறது.

இந்த வேலைத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 5 இலட்சம் செலவாகுமென்றும், செலவில் மீதி விழும் தொகையை மாநில அரசினர் தங்கள் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து சரி செய்துகொள்வார்களென்றும் கூறப்படுகிறது.

சென்னை, கச், சிக்கிம், திரிபுரா, உத்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் சாலை முன்னேற்ற வேலைகளுக்காக ரூ 6,88,450 வழங்கப்பட்டுள்ளதாம்.

அரிசி விலை உயருமாறு சர்க்கார் விட்டுவிட மாட்டார்களாம்!

நியாயமான விலையில் அரிசி விற்பதற்கு முடிவு செய்துவிட்டார்களாம்!

சென்னை, ஜூன் 18—

ஜூலை மாதம மத்தியிலிருந்து நவம்பர் மாதம் வரையில், அரிசி உணவு சாப்பிடும் பகுதிகளில்—சிறப்பாகத் தென்னிந்தியாவில் நியாயவிலைக் கடைகளின் மூலமாக நியாயமான விலைக்கு அரிசி விற்பது என்று அரசாங்கம். முடிவு செய்திருப்பதாக இந்திய அரசாங்க உணவு இலாகாவைச் சேர்ந்த துணை அமைச்சர் கிருஷ்ணப்பா அறிவித்துள்ளார்.

நியாயமான விலைக்குமேல் அரிசி விலை உயரும்படி அரசாங்கம் விட்டுவிடாதென்றும, பர்மாவிலிருந்து வரவிருக்கும் அரிசி பல்வேறு மாநிலங்களின் தேவையைப் பூர்த்தி செய்துவிடுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது டி. பு சி. எஸ். விநியோகித்துவரும் அரிசி, உடனடியாக நிறுத்தப்பட்டுவிட்டு, அதற்குப் பதில் ஒரிசாவின் முதல் தரப் புழுங்கலரிசியும், இதர நல் புழுங்கலரிசியும் விநியோகிக்கப்படுமென்று அவர் குறிப்பிட்டார்.

ஜூலை—நவம்பர் மாதங்களுக்கு இடையே ரூ. 40 கோடி பெறுமான முள்ள அரிசி, மாநில சர்க்கார்களுக்கு விநியோகிக்கப்படுமாம்.

'கடந்த 14 மாதங்களில் ரூ 40 கோடி பெறுமானமுள்ள அரிசி தனிப்பட்டோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது; சர்க்கார் இதைச் செய்திராவிட்டால், அரிசி விலை இன்னும் ஏறியிருக்கும்' என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பார்க்கவே மறுத்து விட்டாராம், பாரதப் பிரதமர்!

பரமக்குடியில் அண்ணா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை; மாருக, அடக்குமுறைகளையும் தாங்கிக்கொண்டு, கழகம் ஓங்கிவளர்ந்திருக்கிறது.

"இன்று, கழகத்தில், இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்; இப்படி வளர்ந்துள்ள கழகம் திருச்சியில் மாநாடு நடத்திற்று, அண்மையில்!

"அந்த மாநாட்டிற்கு வந்திருந்த மக்களிடத்தில் கேட்டது, கழகம்—'வரப்போகும் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடவேண்டுமா—வேண்டாமா?'—என்று! மக்கள், 'கழகம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்' என்ற தீர்ப்பை அளித்துள்ளனர். மக்கள் அனுமதி தந்ததின் பேரில், தேர்தலில் ஈடுபடுவதென முடிவு செய்து, அதற்கென ஒரு கமிட்டியும், நியமிக்கப்பட்டிருக்கிறது.

"இதற்குள்ளாகவே, கழகத்தின் மீது பல திசையிலிருந்தும் தாக்குதல்கள் துவங்கிவிட்டன. பத்திரிகைகள் இப்போது தினந் தினம், கழகத்தைப் பற்றிய செய்திகளை வெளியிட்டு மகிழ்கின்றன; 'தி. மு. க.-வினர் தேர்தலில் ஈடுபடுவார்களாம்! நாடகமாடிகள் நாடாள நினைப்பதா? முதன் மந்திரி கடும் தாக்குதல்'—என்ற தலைப்புகளில் செய்திகள் வெளிவருகின்றன.

"நம்முடைய மாநில மந்திரிகள் எங்கு சென்றாலும், இப்போது கழகத்தைப் பற்றியே பேசுகிறார்கள்; அதிகம் பேசாத காமராசர் கூட, இப்போது பேசத் தலைப்பட்டுவிட்டார்.

"'நாராயணன் கோயிலுக்கு நாலு பக்கமும் வாசல்' என்பது போல, காங்கிரசிற்கு எதிர்ப்பே இராது என்று எண்ணினார்கள், காங்கிரசார்!

"தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடும் என்று முடிவு செய்த பின், 'காங்கிரசிற்குப் போட்டியே இராது' என்று எண்ணிய எண்ணம்,வீணாய்ப்போகவே,இப்போது, 'இவர்களிடம் காசு ஏது, தேர்தலில் போட்டியிட!' என்று பேசுகிறார்கள்—எண்ணுகிறார்கள்!

"உண்மைதான்; கழகத்தவரிடம் கையில் காசு இல்லை! ஆனால் அதேபோது, உள்ளத்தில் மாசும் இல்லை!

"காங்கிரஸ் காரர்களிடத்தில் இலட்சக்கணக்கான பணம் இருக்கிறது என்பதும் உண்மைதான்; அந்தப் பணத்தையெல்லாம், நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதால் செலவு செய்வதாக வேண்டும்.

"நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதின் மூலம், காங்கிரஸ்காரர்களை நன்றாகக் 'கவாத்து' வாங்குவோம்.

"காங்கிரஸ்காரர்கள் எதைச் சொல்லி, நாட்டு மக்களிடத்தில் ஓட்டுக் கேட்கப்பார்க்கிறார்கள்?

"பெண் கொடுப்பதற்கு முன்பாக, 'பையன், யோக்கியமானவன் தானா? வேலை செய்கிறானா? எவ்வளவு சம்பாதிக்கிறான்? பெண்ணை வைத்துக் காப்பாற்றுவானா?'—என்றெல்லாம் கேட்கிறார்களே நாட்டில், அது போல, காங்கிரசாருக்கு 'ஓட்டு' தருமுன், நாட்டவர் கேட்கமாட்டார்களா—'கடந்த எட்டாண்டு காலத்தில் என்ன செய்தீர்கள், எங்கள், வாழ்வு உயர?'—என்று!

"ஆனால் காங்கிரஸ்காரர்கள், தாங்கள் கடந்த காலத்தில், மக்களுக்குச் செய்த நன்மைகளைக் காட்டி அல்ல, 'ஓட்டு'க் கேட்கப் போவது?

"தங்களிடமுள்ள பணத்தைக் காட்டி, சாதியைக் காட்டி, 'கழகத்தவர் நாத்திகர்கள்' என்று கூறித்தான் 'ஓட்டு' கேட்கப்போகிறார்கள்.

"மக்கள் கடந்த காலத்தில், பணத்திற்கும் — சாதிக்கும் மதிப்பு வைத்து 'ஓட்டு'ப் போட்டதினால்தான், இன்று அவதியுறுகிறார்கள் என்பதை உணர வேண்டும்.

"தேர்தலில் நிற்பவரின் திட்டங்களை மனதில் எண்ணி, கூறுகிற கருத்துக்களைச் சிந்தித்துப்பார்த்து, எடுத்துக் காட்டுகிற அரசியல் நிலைகளைப் புரிந்துகொண்டு, மக்கள் 'ஓட்டு'ச் செய்யவேண்டும் என்று கழகம் வற்புறுத்திக் கூற விரும்புகிறது.

"நாங்கள் தேர்தலில் நிற்க வேண்டும் என்று முடிவு செய்திருப்பது, மந்திரி பதவி பெறுவதற்காகவோ, சட்டசபை உறுப்பினர் என்ற 'பவிசு' அடைவதற்காகவோ அல்ல!

"மந்திரி பதவி கிடைப்பது என்பது ஒன்றும் அவ்வளவு கஷ்டமானதல்ல என்பதை,நீங்கள் அறியமாட்டீர்களா?

"ஆச்சாரியார் — மாணிக்கவேலரை மந்திரியாக்கினார்!

"காமராசர்—இராமசாமி படையாச்சியை மந்திரியாக்கினார்!

"இவர்கள் இருவரும் எப்போது கதர் கட்டினார்கள்? எப்போது கை ராட்டினம் சுற்றினார்கள்? பின், எப்படி மந்திரியாக முடிந்தது?

"இவர்கள் எல்லாம் மந்திரியாக முடிந்திருக்கும்போது, எங்களாலா முடியாது? எனவே, மந்திரி பதவி பெறுவதற்காக அல்ல, தி. மு கழகத்தவர் தேர்தலில் போட்டியிடுவது!

அதேபோல, ஆட்சியில் இப்போது காமராசர் அமர்ந்திருக்கிறார்; முன்பு ஆச்சாரியார் அமர்ந்திருந்தார்! இவர்களில் எவர் ஆட்சியிலிருக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு அக்கறையா என்றால், இல்லை!

"ஆட்சியிலுள்ள ஆட்கள் அல்ல, எங்களுக்கு—நாட்டு மக்களுக்கு—முக்கியம்; எப்படிப்பட்ட ஆட்சி நடக்கிறது என்பதில்தான் எங்களுக்குக் கவலை!

"திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டில், திராவிடர் ஆட்சி நடைபெற வேண்டும் என்று கோறுகிறது.

"இந்த நாடு, இந்த நாட்டவரால் ஆளப்படவேண்டும்; அது, திராவிட நாட்டு ஆட்சியாகத் தான் இருக்கமுடியும்—என்று, தி. மு. கழகம் கூறுகிறது.

"வடநாட்டிற்கு அடிமைப் படாத—சொந்தமான — சுதந்திரமான ஆட்சியாக, இருக்க வேண்டும்.

"1947-ல் சுதந்திரம் வந்துவிட்டதாகக் கூறுகிறார்கள்; அன்று முதல் இங்கே சுதந்திர ஆட்சி நடைபெறுவதாகப் பேசுகிறார்கள்.

"இங்கே, நமது மாநிலத்தில் நடைபெறுகிற சர்க்கார், சுதந்திர சர்க்காரா? இங்கே உள்ள சர்க்காருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அதிகாரங்கள் அனைத்தும் டில்லி சர்க்காரிடம் தானே குவிக்கப்பட்டிருக்கின்றன? இங்கே உள்ள 'சின்ன' சர்க்கார், அங்கே உள்ள 'பெரிய' சர்க்காருக்கு அடக்கம் என்ற நிலை, இல்லாமலா இருக்கிறது!

"சூரியனிடமிருந்து ஒளியைக் கடன் வாங்கி, தேய்ந்து வளர்ந்து, வளர்ந்து தேய்ந்து பிரகாசிப்பதாகக் கூறுவர், சந்திரனை! அது போலத்தானே, டில்லி சர்க்காரிடமிருந்து அதிகாரங்களைக் 'கடன்' வாங்கி, இயங்கவேண்டிய நிலையில் இந்த மாநில சர்க்கார் இருக்கிறது? (தொடரும்)

ஏமாற்றத்தோடு திரும்புகிறது என். ஜி. ஓ. தூதுக் குழு!

அடுத்த நடவடிக்கை என்ன?

புதுடில்லி, ஜூன் 19—

சென்னை என். ஜி. ஓ.-க்களின் தூதுக்குழுவுக்குப் பேட்டியளிக்கப் பிரதமர் நேரு மறுத்துவிட்டார். தூதுக்குழு வசதியான சந்தர்ப்பம் இல்லாத சமயத்தில் பேட்டி காண வந்துள்ளதாம்! அதனல் பேட்டி அளிக்க பிரதமர் நேருவுக்கு நேரம் இல்லையாம்!

மேலும், சென்னை என். ஜி. ஓ.-க்களின் விவகாரம் முற்றிலும் அவர்களது மாநில அரசாங்கத்தைச் சேர்ந்ததாம்! எனவே அவர்கள் தங்கள் பிரச்சினையை மாநில அரசாங்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமாம்!

தூதுக்குழுவின் தலைவர் திரு. கே. கே. மேனன் பிரதமருக்கு அனுப்பிய அவசரக் கடிதத்திற்குப் பதிலாகவே மேற்கண்ட செய்திகளை தூதுக்குழுவினர் கேட்டனர்.

36 உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழு பிரதமர் நேருவின் இல்லத்தின் முன்னர் 4 மணி நேரம் காத்திருந்த பிறகே மேற்கண்ட பதிலைப் பெற்றுள்ளனர்!

சென்னையிலிருந்து நீண்ட தூரம் பிரயாணம் செய்து நேருவைக் காணவந்த தூதுக் குழுவினர் நேரு பேட்டி அளிக்க மறுத்தமையால், பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாகி விட்டனர்.

ஏமாற்றமடைந்த என். ஜீ. ஓ.-க்கள், தங்கள் மாநாட்டில் தீர்மானித்தபடி வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

மேற்கொண்டும் எந்த அதிகாரிகளையும் என். ஜீ ஓ.-க்கள் பார்ப்பதாக இல்லை; நாளையே அவர்கள் சென்னைக்குப் புறப்பட்டு விடுவர் என்று தெரிகிறது.

அடக்குமுறைக்கு ஆளாகி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூவாளூரில் நடைபெற்ற சிறப்புக்கூட்டம் ஒன்றில், தலைமை நிலையச் சார்பில் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன், இரு தோழர்களுக்கும் தலா ரூ. 500 வழங்கினார்.

நிகழ்ச்சி விவரம்

16—6—56 மாலை 7 மணிக்கு, பூவாளூர் தி. மு. கழகக் கிளை சார்பில், பூவாளூர் மார்க்கெட் மேல்புறம் அமைக்கப்பெற்ற மேடையருகில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் அனபில் ஏ. பி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தி. மு. கழகக் கொள்கைகளையும், கல்லக்குடிப் போராட்டம், அரசியலார் அடக்குமுறை, துப்பாக்கிக் குண்டுக் காயம்பட்டு உறப்பிழந்த தோழர்கட்குத் தலைமைக் கழகம் உதவி நிதி வழங்குவதின் நோக்கம் ஆகியவைபற்றி தலைவர் விளக்கிப் பேசினார்.

பின்னர், தோழர்கள் எம். எஸ். மணி, ஜி. பராங்குசம், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் தி. மு. க. மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்தும், தேர்தல் குறித்தும் விளக்கிப் பேசினர்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கல்லக்குடி அறப்போரில் அரசியலாரின் அடக்குமுறை வெறிச்செயலால் துப்பாக்கிக் குண்டுக் காயங்களால் உறுப்புகளை இழந்த தோழர்கள் சந்தானம் ஜோசப் (புள்ளம்பாடி); சபஸ்தியன்ராஜ் (பூவாளூர்-பின்னவாசல்) — ஆகிய இருவருக்கும் தி. மு. கழகத் தலைமை நிலையச் சார்பில், உதவி நிதியாக தலா ரூ. 500 வீதம் வழங்கினார்.

மறைந்த நடராசன் குடும்பத்தாருக்கும் விரைவில் நிதிவழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப் படுமென்றும் துணைப் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

பின்னர், அவர், தி. மு. கழக எதிர்கால வேலைத் திட்டங்களைப் பற்றியும், காங்கிரஸ் மந்திரிகளின் எதிர்ப்புப் பிரச்சார முறைகள் பற்றியும் விளக்கிப் பேசினார். தலைவர் முடிவுரை கூற செயலாளர் தோழர் சேது அவர்கள் நன்றி கூறி, தோழர்கட்குக் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் சூட்டினார்.

தட்சிணப் பிரதேசத் தகராறு:

'என் கருத்தை நான் மாற்றிக் கொள்ளமாட்டேன்'

மராமத்து இலாகா மந்திரி சேதுபதியின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 19—

"தட்சிணப் பிரதேச அமைப்புக் குறித்து நான் கொண்டுள்ள கருத்தை மாற்றிக்கொள்வவில்லை; அவ்வாறு மாற்றிக் கொள்வதற்கு நான (பருவங்லை காட்டும்) காற்றாடி அல்லன்; அல்லது பச்சோந்தியோ என்றால் அதுவும் அல்லன்; தட்சிணப் பிரதேச அமைப்புக்கு இப்போது காலம் இடங் கொடுக்கவில்லை என்று சொல்லப்படக்கூடும்; அதை நானும் ஒப்புக்கொள்கிறேன்,"

என்று, சென்னை மராமத்து இலாகா மந்திரி எஸ் ஆர். சேதுபதி, ஒரு பேட்டியின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை மாற்றிக்கொண்டீர்களா என்ற கேள்வியை என்னிடம் கேட்கக்கூடாது; முதலமைச்சர் காமராசரைக் கேட்டிருக்கவேண்டும். மந்திரிகளின் சாதாரணக் கூட்டமொன்றில், தட்சிணப் பிரதேச அமைப்பைத் தாம் ஆதரிப்பதாக காமராசர் குறிப்பிட்டார்; ஆனல், பிறகு சிறிது நாள் சென்று, தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றும், தாம் தவருகப் புரிந்து கொள்ளப்பட்டதாகவும் எங்களிடம் அவர் குறிப்பிட்டார்,"

என்றும் சேதுபதி அவர்கள் கூறியுள்ளார்.

"முதலில் மைசூர் அரசாங்கமும், திரு-கொச்சி அரசாங்கமும் தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரித்தது; ஆனல் இப்போது, திரு-கொச்சியில் ஜனதிபதியின் ஆட்சி நடைபெறுகிறது; நிலையான மந்திரி சபை இருந்து வருகின்ற சென்னையிலும தட்சிணப் பிரதேச அமைப்புப் பிரச்சினையில் கருத்து வேறுபாடு இருக்கிறது; திரு-கொச்சி அரசாங்கத்திலும் தட்சிணப் பிரதேச அமைப்பில் இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"முதலில், சென்னையும்—திரு-கொச்சியும் இணைய வேண்டும்; மைசூர் பிறகு சேர்ந்துகொள்ளும்; ஆனல், இப்போது இப்பிரச்சினை குறித்து யாரிடம் பேச்சுவார்த்தை நடத்துவது? எனவே, பொதுத் தேர்தல்கள் நடக்கும்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது" என்றும், அவர் சொன்னார்.

வடக்கு வளரும் வகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

50,000 டன் எஃகும், செக்கோஸ்லேவேகியாவிலிருந்து 40 000 டன்னும், ஜப்பானிலிருந்து 1,00,000 டன்னும், பெல்ஜியத்திலிருந்து 31,000 டன்னும், மேற்கு ஜெர்மனியிலிருந்து 65,000 டன்னும் வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

500 குடும்பத்தினரின் ஆதரவற்ற நிலை

மீன் பிடிப்போர் நடுவீதியில்

"சென்னை—இராயபுரம், பனைமரத்தொட்டியில் இராணுவத்தினர் மனையில் 5 ஆண்டுகளாகக் குடியிருந்துவந்த சுமார் 500 குடும்பங்கள் கொண்ட குடிசைகளை அரசினர் உதவியால் 4 நாட்களுக்கு முன்னர் பிரித்தெறியப்பட்டுவிட்டது. மீன் பிடிப்போரான அந்த 500 குடும்பத்தினரும் எங்குச் செல்வதென்று தெரியாது தவித்து, இராயபுரம் சென் பீட்டர் கோயில்சாலை 'பிளாட்பாரத்'தில் அனாதையராய் தற்காலிகக் குடிசை அமைத்து, குழந்தை குட்டிகளுடன் ஆதரவற்ற பரிதாப நிலையில் இருந்துவருகின்றனர். இவர்களின் அவலநிலை நீங்க அரசாங்க அதிகாரிகளோ, 'கார்ப்பரேஷன்' அதிகாரிகளோ இதுவரை எவ்வித உதவியும் செய்யாதது மிகவும் வருந்தத்தக்கதாகும்," என்று இளைஞர் மணிமன்றச் செயலாளர் தோழர் கா. கோவிந்தராஜ் அறிவிக்கிறார்.

புதிய பஞ்சாயத்துகள்

சென்னை, ஜூன் 18—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1956 ஏப்ரல் திங்களில் வெங்கல், பின்னபாக்கம், மாலந்தூர், தொடுக்காடு. திருபுராந்தகபுரம் ஆகிய ஊர்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டது.

இராணுவக் கூட்டுகளிலோ, ஒப்பந்தங்களிலோ எகிப்து சேராதெனக் கூறப்பட்டுள்ளது.

அணுசக்தி கப்பல் ஓட்ட நார்வே முயற்சி

அணுசக்தி மூலம் இயங்கும் கப்பலை 1959-க்குள் நார்வே நாடு ஓட்டக்கூடுமாம்! அமெரிக்க முறைகளால் சாத்தியமானதை விடக் குறைந்த செலவில் இது நடைபெறக் கூடுமென உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இந்தியா 1954-ல் ரூ. 102 கோடி ரூபாய் மதிப்புள்ள கனிசப் பொருள்களை உற்பத்தி செய்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.